## பொங்கல் திருநாளையொட்டி – இலவச வேட்டி, சேலைகள் மற்றும்

# பொங்கல் தொகுப்பு: முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

### சைதையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் – திட்டத்தை முதல்வர் தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஜன. 10 -**

**தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாட 2,20,94,585 அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் முகாம்வாழ் இலங்கை தமிழர்கள் குடும்பங்களுக்கு தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழுக் கரும்புடன் கூடிய பொங்கல் தொகுப்பு வழங்கும் திட்டத்தையும் இலவச வேட்டி சேலைகள் வழங்கும் திட்டத்தின் கீழ், 1 கோடியே 77 லட்சத்து 22 ஆயிரம் வேட்டிகள், 1 கோடியே 77 இலட்சத்து 64 ஆயிரம் சேலைகள் வழங்கும் திட்டத்தையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி தொடங்கி வைத்தார்.**

“பொங்கலோ பொங்கல்” என்று சொல்லும்போதே மக்கள் மனங்களில் மகிழ்ச்சி பொங்குகிறது. தமிழர் தம் ஊனோடு, உயிரோடு, உணர்வோடு கலந்த விழாவாக தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள் அமைந்துள்ளது. இத்தகைய சிறப்புமிக்க தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் திருநாளை மக்கள் அனைவரும் சிறப்பாகக் கொண்டாடும் வகையில், அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் களில் வசிக்கும் குடும்பங்களுக்கு தலா “1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு கரும்பு ஆகியவை பொங்கல் பரிசுத் தொகுப்பாக வழங்கப்படும்” என்று அரசாணை வெளியிடப்பட்டது.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.1.2025) சென்னை, திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்தின் மூலம் சைதாப்பேட்டை, சின்னமலையில் அமைந்துள்ள நியாயவிலைக் கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் திட்டத்தையும், இலவச வேட்டி–சேலை வழங்கும் திட்டத்தையும் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வின்போது, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., துணை மேயர் மு.மகேஷ்குமார், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ. அமுதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

மேலும், பொங்கல் திருநாளை முன்னிட்டு இலவச வேட்டிசேலைகள் பொங்கல்பரிசுத் தொகுப்புடன் சேர்த்து வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.1.2025) சென்னை, திருவல்லிக் கேணி நகர கூட்டுறவு சங்கத்தின் மூலம் சைதாப் பேட்டை, சின்னமலையில் அமைந்துள்ள நியாயவிலைக் கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் திட்டத்தையும், இலவச வேட்டி - சேலை வழங்கும் திட்டத்தையும் தொடங்கி வைத்தார்.

பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் திட்டத்தின் மூலம், 249.76 கோடி ரூபாய் செலவில் 2,20,94,585 அரிசி குடும்ப அட்டைதாரர்களும், இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினர்களும் பயன் பெறுவார்கள்.

மேலும், பொங்கல் திருநாளையொட்டி அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் கீழ், 1 கோடியே 77 இலட்சத்து 22 ஆயிரம் எண்ணிக்கையிலான வேட்டிகள் மற்றும் 1 கோடியே 77 இலட்சத்து 64 ஆயிரம் எண்ணிக்கையிலான சேலைகள் நியாய விலைக் கடைகள் மூலம் பொங்கல் தொகுப்புடன் வழங்கப்படும்.

தமிழ்நாடு முழுவதும் உள்ள 37,224 நியாய விலைக்கடைகளில் நேற்று (9.1.2025) முதல் 13.1.2025 வரை பொங்கல் பரிசுத்தொகுப்பு அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும். அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் நேற்று தொடங்கி வைக்கப்பட்டது. இப்பணிக்கு கூட்டுறவுத் துறை, வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சித்துறை மற்றும் கைத்தறித்துறையைச் சேர்ந்த சுமார் 50,000 அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

பொங்கல் பண்டிகைக்கு முன்னதாக அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் தொகுப்பு வழங்கும் வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. தமிழச்சி தங்கபாண்டியன், துணை மேயர் மு. மகேஷ்குமார், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த்துறை செயலாளர் திருமதி வே.அமுதவல்லி, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர் ந.சுப்பையன், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## மேயர் பிரியா தலைமையில் சென்னை கிழக்கு மாவட்டத்தில்

# 8-வது நாளாக அமைச்சர் பி.கே. சேகர்பாபு மக்கள் தேவைகளை தீர்க்கும் பயணம்!

### வீடு, வீடாக மக்களைச் சந்தித்து குறை கேட்டார்!

சென்னை,ஜன.10-

மேயர்.பிரியாராஜன் தலைமையில், சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட திரு.வி.க. நகர், துறைமுகம் ஆகிய தொகுதிகளில் பாகவாரியாக எட்டாவது நாளாக மக்கள் தேவைகள் தீர்க்கும் பயணத்தில் அமைச்சர் மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு மக்கள் தேவைகள் கேட்டறிந்தார்.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னை கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட கொளத்தூர் அம்பத்தூர் வில்லிவாக்கம் திருவிக நகர் எழும்பூர் துறைமுகம் ஆகிய 6 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள 44 வார்டுகளில் அமைப்பு ரீதியாக உள்ள 83 வட்டங்களிலும் மாமன்ற உறுப்பினர்கள் மாநகராட்சி அதிகாரிகள் கழக நிர்வாகிகள் ஆகியோருடன் பகுதிகள் மற்றும் வார்டுகள் வாரியாக உள்ள பாகங்களில் பொதுமக்கள் தேவைகளை கண்டறியும் சிறப்பு முகாம் இன்று எட்டாவது நாளாக தொடர்ந்து நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் நேற்று (09.01.2025) காலை 7.30 மணியளவில் துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, 5 வது மண்டலம், வட்டம்-59 அ வட்டம் பாகம் 163,164,165,166,167,168,169 ஆகிய ஏழு பாகங்களில்மேயர் திருமதி. பிரியா ராஜன் அவர்கள் தலைமையில் மண்டல குழு தலைவர் பி.ஸ்ரீ. ராமுலு, பகுதிக் கழகச் செயலாளர் எஸ். முரளி ஆகியோர் முன்னிலையில் இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, துறைமுகம் மேற்கு பகுதி,59-வது வார்டு, ஸ்ரீ பாடிகாட் முனீஸ்வரர் கோயில் எதிரில் உள்ள முத்தையா சத்தியவாணி முத்து நகரில் (எம்.எஸ். நகர்) வசிக்கும் பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்து, அப்பகுதியிலுள்ள மாநகராட்சி தொடக்கப் பள்ளியை நேரில் சென்று ஆய்வு செய்த போது, சிதிலமடைந்த கட்டடத்தை உடனடியாக சரி செய்து தருமாறும், அப்பள்ளியில் படிக்கும் மாணவ மாணவியர்கள் அமைச்சர் அவர்களிடம் விளையாட்டுத் திடலை மேம்படுத்தித் தருமாறு கோரிக்கை வைத்தனர், உடனடியாக அதற்குண்டான பணிகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு மாநகராட்சி அலுவலர்களை அறிவுறுத்தினார்.







இந்த ஆய்வின் போது திரண்டிருந்த செய்தியாளர்கள் சீமான் குறித்து கேட்ட கேள்விக்கு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

கரைந்து கொண்டிருக்கின்ற இயக்கமாக அவருடைய இயக்கம் மாறிக் கொண்டு உள்ளது ஆதலால் ஏதாவது ஒன்றை இப்படி பேசி தன்னை அடையாளப்படுத்திக் கொள்வதற்காக செய்கின்ற முயற்சிகள் தான் இது. அதற்காகவே ரூம் போட்டு சிந்திப்பார் என்று நினைக்கின்றேன், தினந்தோறும் வாழ்ந்து மறைந்த தலைவர்கள், இந்த நாட்டின் முன்னேற்றத்திற்காக பாடுபட்ட தலைவர்கள், இருட்டிலிருந்த இந்த சமுதாயத்தை வெளிச்சத்துக்கு கொண்டு வந்த தலைவர்கள், விடிவெள்ளிகள், பகுத்தறிவுவாதிகள் போன்றவர்களை கொச்சைப்படுத்தினால் தான் தன்னுடைய பெயர் அடையாளப்படுத்த முடியும் என்பதற்காக இவ்வாறு பேசுகிறார். கரைந்து கொண்டிருக்கின்ற அந்த இயக்கத்தை அவர் காப்பாற்றுகின்ற முயற்சியில் ஈடுபட வேண்டுமே தவிர வாழ்ந்து மறைந்தவர்கள், இந்த நாட்டிற்காக தொண்டாற்றியவர்கள் பற்றி விமர்சனம் செய்வதை நிறுத்திக் கொள்ள வேண்டுமென்று தெரிவித்தார்.

மேலும் மாலை 4.00 மணியளவில் துறைமுகம் மேற்கு பகுதியில் ராசப்பா தெரு பகுதியிலும்,கந்தசாமி கோவில் மற்றும் தங்க சாலையில் உள்ள ஏகாம்பரேஸ்வரர் கோவில், எடப்பாளையம் பகுதியில் உள்ள பூங்கா மற்றும் நூலகத்தையுகம்,சிங்கன தெரு, நன்னியம் தெரு, ப்ளூ ஸ்டார் ஆகிய பகுதிகளில் பொதுமக்களை சந்தித்தும்.. அப்பகுதியில் உள்ள மின்மாற்றுகளை ஆய்வு செய்தும்,வால்டாக்ஸ் சாலையில் புதியதாக கட்டப்படும் திருமண மண்டபம் மற்றும் கற்பக சுந்தர விநாயகர் கோவில் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளின்போது வட்ட செயலாளர் சேப்பாக்கம் வே.பா.பிரபாகரன், சதிஷ் குமார் ,ஜி.ராமமூர்த்திமற்றும் வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மண்டல அலுவலர் திருமதி.பரிதா பானு, செயற்பொறியாளர் திரு சொக்கலிங்கம், மின்சார வாரிய செயற்பொறியாளர் பிரேம்குமார் மாநகராட்சி, குடிநீர் மற்றும் வடிகால் வாரியம், மின் வாரிய அலுவலர்கள் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

மற்றும் சென்னை மாநகராட்சி, சென்னைக் குடிநீர் வாரியம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மானக் கழக அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

## திருவல்லிக்கேணி பகுதியில் தமிழர் திருநாள் பொங்கல் விழா!

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நல உதவிகள் வழங்குகிறார்!

### நே.சிற்றரசு – தயாநிதிமாறன் எம்.பி. பங்கேற்பு! பகுதிச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ் அறிக்கை!

*சென்னை, ஜன. 10 -*

*சென்னை மேற்கு மாவட்டம் திருவல்லிக்கேணி பகுதியில் தமிழர் திருநாள் பொங்கல் விழா முன்னிட்டு கழக நிர்வாகிகள் மற்றும் பி.எல்.எ.2, பி.எல்.எ.3 ஆகியவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (10-01-2025, வெள்ளிக்கிழமை) மாலை 4 மணியளவில்*

*ஒய்.எம்.சி.ஏ. மைதானம், இராயப்பேட்டையில் நடைபெறுகின்றது.*

*மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு தலைமை வகிக்கிறார். பகுதிச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் முன்னிலை வகிக்கிறார்.*

*துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நல உதவிகள் வழங்குகிறார். மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்.*

*இந்நிகழ்ச்சியில் வீ.பி. பொன்னரசு, ஆர்.என்.துரை, மருத்துவர் ஆர்.சுபேர்கான்,*

*வி.என். ராஜன், வழக்கறிஞர் ப.பிரகாஷ், வே.கமலா செழியன், ரவி. ராஜ்குமார், ஏ. விஜயராஜ், இ.இளம்பாரதி, எம்.கே.ஆனந்த், பகுதிக் கழக நிர்வாகிகள் ம.தயாநிதி, கே. திருநாவுக்கரசு, சி.தினகரன், எம்.பிரேம்ராஜா, ரா.பத்மாவதி*

*வட்டக் கழக செயலாளர்கள் ஐ.சி.எப்.எம்.சங்கர், ஜெ.விஜயகுமார், என்.ரவி, க.வே.மோகன்,*

*கே.ஜி.செந்தில்குமார், கே. பிரபு, எஸ்.சசிகுமார், ஏம். கலில்ரகுமான், மா.பச்சையப்பன், ஆர்.சசிகுமார், வெ.சீனிவாசன், ஆர்.கஜேந்திரன், எஸ்.விஜயகுமார் ஏல்.துளசிராமன், ஏ.பி.வேலு, ஆர்.ராஜ்குமார் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.*

---

## ஆவடி கோவில் பதாகை ஏரியினை

# ரூ.38 இலட்சம் மதிப்பீட்டில் ஆழப்படுத்துவதற்கான பணி!

### அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்தார்!

*திருவள்ளூர், ஜன. 10-*

*திருவள்ளூர் மாவட்டம் ஆவடி மாநகராட்சி கோவில் பதாகை ஏரி, ரூ.38 இலட்சம் மதிப்பீட்டில் ஆழப்படுத்துவதற்கான பணி துவக்க விழா நடைபெற்றது இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தலைமை தாங்கி பணியை துவக்கி வைத்தார்*

*பின்னர் அமைச்சர் தெரிவிக்கையில்,*

*ஆவடி மாநகராட்சி பகுதியில் உள்ள கோயில் பதாகை ஏரியின் கொள்ளளவு 80 மில்லியன் கன அடியாக உள்ளது. மழை காலங்களில் கோயில் பதாகை ஏரிக்கு வரும் வெள்ள நீரினால் கணபதி நகர் சாலை பகுதிகளுக்கு வெள்ள நீர் புகுந்து பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்புக்குள்ளாகிறது அதை தீர்வு காணும் வகையில் ஆகவே இந்த ஏரியிலிருந்து வெளியேறும் நீரினை கடத்துவது தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள். மாநகராட்சி ஆணையர், மேயர், நீர்வளத்துறை ஆகியோருடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இங்கிருந்து வெளியேறும் நீரினை கிருஷ்ணர் நீர் கால்வாய்க்கு கொண்டு செல்லும் வகையில் கோவில் பதாகை ஏரியினை ரூ.38 இலட்சம் மதிப்பீட்டில் 2 அடிக்கு ஆழப்படுத்தி தடுப்பணை அமைப்பதற்கான பணிக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. ஆகவே இனி வரும் மழை காலங்களில் வெள்ள நீர் கணபதி நகர் சாலை பகுதிக்கு செல்வதை தவிர்க்கும் வகையில் கிருஷ்ணர் நீர் கால்வாய்க்கு செல்லுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும் என அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தெரிவித்தார்*

*முன்னதாக ஆவடி மாநகராட்சி 43 வார்டு பகுதியான பருத்திப்பட்டிலிருந்து கூவத்திற்கு செல்லும் வரத்து கால்வாயில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணி மேற்கொள்ள வேண்டும் என அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.*

*இந்நிகழ்வில், மாநகராட்சி ஆணையர் ச.கந்தசாமி. ஆவடி மாநகராட்சி மேயர் கு.உதயகுமார் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.இராஜ்குமார் துணை மேயர் திரு. சூரியா குமார் , ஆவடி மாநகராட்சி பொறியாளர் ரவிசந்திரன், மண்டல தலைவர் ஜி. ராஜேந்திரன், ஆவடி வட்டாட்சியர் சசிகலா, பகுதி மாநகர பொறுப்பாளர் சன்.பிரகாஷ், பகுதி செயலாளர் பொன்.விஜயன் மற்றும் அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் , பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.*